விலை: சதம் 75 ★★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஐப்பசி 20 முஹரம் 7 இதழ் 263
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5 11 1981

## வரியிறுப்பாளர் குறைகேட்க நிர்வாக மேற்பார்வையாளர்கள்

### 54 உப அலுவலகங்களுக்கு 34 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கும் 54 உப அலுவலகங்களுக்கும் 34 நிர்வாக மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வரியிறுப்பாளர்கள் தங்கள் குறைகளையோ தேவைகளையோ இனிமேல் உப அலுவலகமட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாக மேற்பார்வையாளர்களிடம் தெரிவித்துக் கொள்ளலாம் என்று அபிவிருத்தி சபைத்தலைவர் திரு சு. நடராசா தெரிவித்துள்ளார்.

உப அலுவலகங்களின் நிர்வாகத்தைத் திறம்படநடாத்தவும், வரியிறுப்பாளர்களுக்குச் சிறந்த சேவையைத் துரிதகதியில் ஆற்றவும், வரி நிலுவைகளை விரைவில் அறவிட்டு அபிவிருத்திவேலைகளைத்துரிதப் படுத்தவுமே இம்மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தலைவர் விடுத்துள்ள அறிவித்தலில்

(6-ம் பக்கம் பார்க்க)

## இருமணி நேர பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்றுக்காலை ஆரம்பமான பகிஷ்கரிப்பு இரு மணி நேரத்தில் கைவிடப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் அனுபவித்துவரும் அசௌகரியங்களை நீக்க வேண்டுமென்றகோரிக்கைகளை முன்வைத்து காலை 9 மணிக்கு ஆரம்பமான இவ் வேலைநிறுத்தம் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் உறுதிமொழிகளையடுத்துக் கைவிடப்பட்டது.

# சம்பள மீளாய்வுக்குழு சிபார்சு

# அமைச்சரவை அங்கீகாரம்

## சம்பள உயர்வுக்கு 200 கோடி ரூபா ஒதுக்கீடு

[கொழும்பு]

சம்பளமீளாய்வுக்குழு அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு அதிகரிக்கப்படவேண்டும் என்று சிபார்சுசெய்து சமர்ப்பித்த அறிக்கையை நேற்று அமைச்சரவை அங்கிகரித்தது. புதிய வரவுசெலவுத்திட்டத்தில் இதற்கென 200 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது-

அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்ட புதிய சம்பளஉயர்வு விபரம் வருமாறு:

பயிற்றப்படாத தொழிலாளர் ஆரம்ப சம்பளம்: 550 ரூபா.
லிகிதர்: 645 ரூபா.
நிர்வாக பொறியியலாளர் சேவை: 1550 ரூபா;
திணைக்களத் தலைவர்: 3600 ரூபா.
அமைச்சுச் செயலாளர்: 4500 ரூபா.
ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்: 1650 ரூபா.
வைத்திய நிபுணர்: 2300 ரூபா.
வைத்தியநிபுணர் உச்சச் சம்பளம்: 8600 ரூபா;
எம். எல். ரி. எஸ் ஆரம்பம் 710 ரூபா. 'கிரேட் 2 பி' 845 ரூபா

### தற்போதைய சம்பள விபரம்

பயிற்றப்படாத ஊழியர் 488 ரூபா 50 சதம்.
லிகிதர்: 565 ரூபா.
நிர்வாகப் பொறியியலாளர் சேவை; 980 ரூபா.
அமைச்சுச்செயலாளர்: 3152 ரூபா.
சம்பள மீளாய்வுக் குழு சிபார்சின்படி புதிய சம்பளங்கள் 82 ஜனவரி முதல் அமுலுக்கு வரும்.

ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் அமைச்சரவை முடிவுகளை பத்திரிகையாளருக்கு தெரிவிக்கையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

வாழ்க்கைச் சுட்டு எண்ணுக்கு அமைய சம்பளம் உயர்த்தப்படவேண்டும் என்றும், ஒரே தரத்திலுள்ள தனியார் துறையினர் கூடுதலான சம்பளத்தைப் பெறுவதால் அரசாங்க ஊழியரின் சம்பளமும் கூட்டப்படவேண்டும் என்று சம்பள மீளாய்வுக்குழு சிபார்சு செய்திருந்தது.

தற்போதுள்ள நிலையில் அரசாங்க ஊழியர்களுக்கு இன்னும் கூடுதல் சம்பள உயர்வு சிபார்சு செய்யப்பட வேண்டுமென்றும், ஆனால் அரசின் மூலவளங்களை கருத்திற் கொண்டு இந்த சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகவும் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## எம். பி. க்கு மூன்றுமாத லீவு

(கொழும்பு)

முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவுக்கு நேற்று பாராளுமன்றத்தில் 3 மாத லீவு வழங்கப்பட்டது.

லீவு வழங்கக்கோரும் பிரேரணையை நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் சமர்ப்பித்தார். (ம)

## யாழ். பஸ் நிலையத்தில் பத்துப் பேர் நேற்றுக் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கொள்ளைகள், வழிப்பறிகள் சம்பந்தமாகக் கண்காணிக்கும் பொருட்டு ரோந்து சுற்றிவந்த யாழ். பொலிசார் 10பேரை சந்தேகத்தின் மீது நேற்றுக்கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு யாழ். பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் இவர்கள் நடமாடிஞர்களாம்.

இன்று காலை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட போது இம்மாதம் 16ம் திகதி

(6ம் பக்கம் பார்க்க)

## இன்று விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சமீபத்திய கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வடபகுதி வந்துள்ள தமிழ் ஆசிரியர்களின் பிரச்னைகள் குறித்து ஆராய்வதற்கான விசாரணைக்குழு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

கல்வி அமைச்சைச் சேர்ந்த திருவாளர்கள் காரியவாசம், ஆரியவன்சா, ஜயதிலகா ஆகிய மூவரைக்கொண்ட குழுவே யாழ் கல்வித்திணைக்களத்தில் இன்றுதொடக்கம் சனிக்கிழமை வரை விசாரணைகளை மேற்கொள்ளும்.

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது?

## "கொழும்பு மாவட்டத்திலுள்ள வெற்றுக்காணிகளை அ. வி, சபைக்கு வீடுகள் அமைக்க வழங்குக"

### கொழும்பு அ. வி. சபை தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திலுள்ள வெற்றுக்காணிகளை அரசு பொறுப்பேற்று வீடமைப்புத் திட்டங்களுக்காக அபிவிருத்தி சபைக்கு வழங்க வேண்டும் என்ற தீர்மானம் கொழும்பு அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. எம். எஸ், செல்லச்சாமி சபையில் மேற்கண்ட பிரேரணையைக் கொண்டு வந்தார்.

வெற்றுக்காணிகளை, உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு பொறுப்பேற்று வீடமைப்புத் திட்டத்திற்காக, அபிவிருத்தி சபைக்கு வழங்கவேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப் பட்டுள்ளது

இவ்வீடமைப்புத் திட்டத்திற்கு வெளிநாட்டு உதவியை நாடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (க)

# கூட்டணி-புலிப்படை தொடர்பு எதுவுமில்லை

### பாராளுமன்றக் குழுவுக்கு ஜனதிபதி விளக்கம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் புலிப்படை இயக்கத்துக்கும் தொடர்பில்லையென்று தாம்நம்புவதாக ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தன அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் உறுதிபட கூறியிருக்கின்றார்.

வடக்கில் இடம்பெற்று வரும் பயங்கரவாதத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கண்டித்து வருகின்றனர். இப் பயங்கரவாதத்தால் லட்சக்கணக்கான தமிழ்மக்கள் பயந்து வாழவேண்டிய நிலையிலுள்ளனர் என்று ஜனதிபதி கூறியிருக்கின்றார்.

அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஜனதிபதி ஜெயவர்த்தன மேலும் தெரிவித்திருப்பதாவது:

"வடக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தலைதூக்கியிருக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளைப் பூண்டோடு ஒழித்துக்கட்டுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

"நாட்டின் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்தி அபிவிருத்திக்கு உதவ தயாராகவுள்ளதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாதமொருதடவை தமிழர் விடுதலைக்கூட்டணியினர் நாட்டின் நிலைமை பற்றி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர் சில சக்திகள் இச் சுமுகமானநிலையைக் குழப்புவதற்கு முயன்று வருகின்றனர். பாராளுமன்ற அங்கத்தவர்கள் இதனை முறியடிக்க வேண்டும்.

பயங்கரவாதத்தை தமிழர் விடுதலைக்கூட்டணியினர் கண்டித்து வருகின்றனர் இப்பயங்கரவாதத்தால் லட்சக்கணக்கான தமிழ்மக்கள் பயந்து வாழவேண்டிய நிலையிலுள்ளனர்.

அரசாங்கம் ஈழக்கோரிக்கையை எதிர்ப்பதால் இதைப் பற்றி தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது பிரஸ்தாபிக்கவில்லை.

தமிழ்மக்களின் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் அதிகாரிகளுக்கு மட்டும் உயர்பதவிகளை வழங்கப்பட்டவில்லை நீதிபதிகள், பொலிஸ் அதிபர்கள், உதவி பொலிஸ் அதிபர்கள் போன்ற உயர்பதவிகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல சிங்களவர்களும் வகித்து வருகிறார்கள் (ஸ)

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 20-ம் திகதி
வியாழக்கிழமை
(5-11-81)

மேடம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும். மேலான வாழ்வு கிட்டும். முன்னேற்ற வாழ்வும் உண்டு. முதியவர் ஆசி உண்டு. தாய்வழித் தனமும் சேரும்.

இடபம்: இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியமேற்படும். எழுத்தாளர்களுக்குப் புதிய படைப்புக்கான கரு கிடைக்கும். நாடகக் கலைஞர்களுக்கு நட்புகள் உண்டு. பொன்னான தினம்.

மிதுனம்: தனதானிய நஷ்டத்துடன் பூமிப் பிணக்கும் தோன்றக்கூடும். வேண்டியவர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். கடமையாற்றும் இடத்தில் நிதானம் வேண்டும். மௌனம் நன்று.

கடகம்: வெற்றி உமது அருகில் விரைந்து வரும். எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள். ஸ்திரவழிகளாலும் நன்மைகள் சேரும். சோதரர்களுக்கு இனிப்பான தினம்.

சிம்மம்: எக்காரியத்தையும் எண்ணித் துணிக. அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக்கூடும். வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும். நிதானம் வேண்டும்.

கன்னி: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றாடலில் மதிப்பு உயரும். புண்ணியஸ்தலம் ஒன்றுக்கும் யாத்திரை மேற்கொள்ளப்படலாம். தெய்வத்தின் துணையுண்டு.

துலாம்: உற்சாகமான தினம். உறவினர்கள் பச்சைக் கொடி காட்டுவார்கள். புதிய தொழில்களில் மனதைச் செலுத்துவீர்கள். இடமாற்றமொன்றுக்கு முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

விருச்சிகம்: பணம்தேடும் படலத்தில் வெற்றிக்கு இடமுண்டு. பாவையர்கள் சிநேகிதமும் கிடைக்கலாம். பெண்களாயின் மனக்கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும். கண்காணிப்பு பலமாகவிருக்கும்.

தனுசு: பிரயாணத்தில் பொருள் தழுவக்கூடும். தனி வழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். அதிக இலாபத்தில் ஈடுபடுவீர்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் பணநெருக்கடியில் ஈடுபடுவீர்கள்.

மகரம்: உள்ளத்தில் அடித்தளம் ஊமைக் கண்ணீர் வடிக்கும். வாழ்க்கையில் தனிமரமாகிவிட்ட எண்ணம் உருவாகும். குடும்பத்தில் தொல்லைகளுக்கு இடமுண்டு. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

கும்பம்: மனநிறைவுக்கு இடம் உண்டு. மதிப்பும் உயரும். அதிர்ஷ்டலாப அரசபோகமும் கிடைக்கும். தொழில் புரியும் இடத்தில் திருப்தி நிலவும். சிலர் வாழ்க்கையில் இடமாற்றம் ஏற்படலாம்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)




30 கிறும்ஸ் - ரூபா 14-75
90 கிறும்ஸ் - ரூபா 38-75

# கைதடியில் ஒருநாள் மாநாடு

[கைதடி] "சமூக விடுதலையில் அறவழி அணுகுமுறை" பற்றிய அறவழி மாநாடு ஒன்று எதிர்வரும் 15 ம் திகதி சனிக்கிழமை காலை தொடக்கம் மாலைவரை கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெறவிருக்கின்றது. [வே. நி]

# பின்னுறுதிக் கட்டளை

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றத்தில்

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த பக்கிரிசாமி கோபாலசாமி என்பவரது மரணசாதனமில்லா சொத்துவிடயத்தில்

வசந்தமலர் கோபாலசாமி 'முருகபூபதி', சங்கத்தானை, சாவகச்சேரி.
-மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரீ 196

எதிராக
1. கோபாலசாமி குமணன் }
2. கோபாலசாமி மதிவி, }
3. கோபாலசாமி அகிலன். }
[பராயமற்றவர்கள்]

4. பஞ்சாபிகேசன் நடேசந்திரம், எல்லோரும் "முருகபூபதி", சங்கத்தானை, சாவகச்சேரி.
-எதிர்வாதிகள்

இவ்வழக்கு 1981 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16 ந் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு. கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் முன்னிலையில் மனுதார் சார்பில் அவரின் சட்டத்தரணிகள் "பரராஜசிங்கமும் அம்பிகைபாலனும்" என்னும் நாமத்தில் செயலாற்றும் திருவாளர்கள் முத்தையா பரராஜசிங்கம், செல்லப்பா அம்பிகைபாலன்" அவர்கள் சமூகமாயிருக்க மனுதாரின் மனுவும், சத்தியக் கூற்றும் வாசிக்கப்பட்டு பின்வருமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

இக்கட்டளைக்கு மாறான காரணங்கள் ஏதும் 1981 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25 ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக குறித்த எதிர்வாதிகளால் அல்லது வேறு அக்கறையுள்ளவர்களால் காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த காலஞ்சென்ற பக்கிரிசாமி கோபாலசாமி மரணச் சொத்துகளுக்கு அவரின் மனைவியாரான குறித்த மனுதார் நிருவாகத்தத்துவகாரியாக நியமிக்கப்படுவார்.

மேலும் இக்கட்டளைக்கு மாறான காரணங்கள் ஏதும் 1981-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக குறித்த 1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகளால் அல்லது அக்கறையுள்ள வேறு எவராலும் காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த 4-ம் எதிர்வாதி இம்மனுவிடயமாக பராயமற்ற 1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகளின் வழக்குக் காவலராக இத்தால் நியமிக்கப்படுவார்.

1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16-ந் திகதி.

ஒப்பம்
க. வி. விக்னேஸ்வரன்
மாவட்ட நீதிபதி

தயாரித்தவர்கள்
பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்
மனுதாரின்
சட்டத்தரணிகள். 1356

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியா வெற்றி

ஹைதராபாத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற ஆசியப் பிராந்தியங்களுக்கான தோமஸ் கிண்ணத்திற்கான பட்மின்ரன் சம்பியன்ஷிப்புக்கான போட்டியில் இந்தியா 9—0 என்ற வித்தியாசத்தில் இலங்கையைத் தோற்கடித்தது. இதன்மூலம் இந்தியா அடுத்த ஆண்டில் நடைபெறவுள்ள அரைஇறுதி ஆட்டத்தில் "சீனா"வுடன் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

## 'மக்-என்ரோ'வின் தோல்வி

"வின்சென்ட் வான் பற்றன்" என்ற அதிபிரபல்யமில்லாத அமெரிக்க வீரரிடம், உலகின் அதிசிறந்த டென்னிஸ் வீரரான ஜோன் மக்-என்ரோ டோக்கியோவில் நடைபெற்ற போட்டியொன்றின் அரை இறுதி ஆட்டத்தில் 6—3, 7—5 என்ற வித்தியாசத்தில் தோல்வியடைந்துள்ளார். 24 வயதான வின்சென்ட் வான் பற்றன் ஒரு [illegible].

## வெற்றி-தோல்வியற்ற 11-வது ஆட்டம்

சோவியத் சம்பியன் "அனடோலி கார்ப்போவுக்கும்" "விக்ரர் கோர்ச்நோய்"க்கும் இடையே நடைபெற்றுவரும் உலக செஸ் சம்பியனுக்கான போட்டியின் 11-வது ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. இதுவரை நடைபெற்று முடிந்த ஆட்டங்களில் 'கார்ப்போவ்' 4-2 என்ற வித்தியாசத்தில் முன்னணியில் திகழ்கிறார். 12-வது ஆட்டம் நவம்பர் 2ம் திகதி ஆரம்பமாகியது.

## டுலீப் மெண்டிஸ் ஆஸ்திரேலியா பயணம்

இலங்கை கிரிக்கெட் குழுவின் உதவி காப்டனும் மிகச் சிறந்த 'பட்ஸ்மனு'மாகிய டுலீப் மெண்டிஸ் ஆஸ்திரேலியா பயணமாகிறார். இவர் அங்கு "அடிலெய்ட்" கிரிக்கெட் குழுவுடனான ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சென்றுள்ளார். அங்கு நடைபெறும் ஷெபீல்ட் கிண்ணத்துக்கான போட்டிகளில் தென் ஆஸ்திரேலியாக் குழுவிற்காக விளையாடவுள்ளார். இதற்காக அவர் சுமார் 700 அவுஸ்ரேலிய டொலர்களை (கிட்டத்தட்ட 16000 ரூபாய்கள்) மாதச்சம்பளமாகப் பெறுவார்.

## இங்கிலாந்தின் வெற்றி

இங்கிலாந்துக்கும் ஸ்பெயினின் குழுவிற்குமிடையேயான ஹொக்கிப் போட்டியில் இங்கிலாந்துக் கோஷ்டி 5-0 கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது

## 15 வருடங்களின் பின் வெற்றி

இங்கிலாந்து பெண்கள் ஹொக்கி குழுவிற்கும் மேற்கு ஜெர்மன் பெண்கள் ஹொக்கி குழுவுக்குமிடையே நடைபெற்ற ஹொக்கிப் 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இவ்வெற்றி கடந்த 15 வருடங்களில் இங்கிலாந்து குழுவிற்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.


# வரி விளம்பரம்

### பயிற்சி

வெல்டிங், வயறிங், ரீவயின்டிங், மோட்டார் மெக்கானிசம், செய்முறை அறிமுறை வகுப்புகள் (14-11-81 ஆரம்பம்) C. E. T. யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி சினிமாவிற்கு முன்), 22, [illegible] செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 1368

### விற்பனைக்கு

யாழ். பலாலி வீதியில் பல்கலைக்கழக சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில் இரண்டரைப் பரப்பு வெற்றுக்காணி, புதிய கட்டுக்கிணறு, சுற்றுமதில்களுடன் விற்கப்படும். தொடர்பு: க. முருகரத்தினம், ஜே பி. 109, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1370

கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் எக்ஸ்பிரஸ் ரியூசன் சென்ரர் முன்பாக ரோட்டுக்கரையில் வீடு கட்டுவதற்கு இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. செல்லத்துரை சிதம்பரவல்லி, இல: 9 பிறவுண் ரோட், நீராவியடி, யாழ்ப்பாணம். 1364

தெல்லிப்பழை ஸ்டேசன் ரோட்டில் $4\frac{3}{4}$ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு கிழமைகளில் நேரில் தொடர்பு கொள்ளவும். சி. சர்வேசக் குருக்கள், ஸ்டேசன் ரோட், தெல்லிப்பழை. 1372

### கல்வி

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள், க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், உயிரியல் விஞ்ஞானம், புள்ளிவிபரவியல், வர்த்தகம், சட்டம் ஆகிய பீடங்களில் பல்கலைக்கழக கல்லூரியில் அனுமதி பெறலாம். விண்ணப்பபடிவம், விபரக்கோவை பெற்றுக்கொள்ள நான்கு ஐம்பது சத முத்திரை 8-11-81 க்கு முன்னர் அனுப்பவும். வெளிநிலை பல்கலைக்கழக கல்லூரி 29, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1366

### தேவை

பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பொருளியல், தமிழ், புவியியல், இரசாயனவியல், கணக்கியல், தாவரவியல் விலங்கியல், வர்த்தகம், புள்ளிவிபரவியல், தூயகணிதம், பிரயோககணிதம் தினசரி நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் கற்பிக்க பட்டதாரி விரிவுரையாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். வெளிநிலை பல்கலைக்கழக கல்லூரி, 29, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 1367

காரைநகர் சீ-நோர் ஸ்தாபனத்தின் கீழ் இயங்கும் சீ-போசன் இறால் பதனிடும் தொழிற்சாலையில் துப்பரவு செய்வதற்கு சுற்றுடலிலுள்ள பெண்கள் தேவை. நேரில் வரவும். பொதுமுகாமையாளர், சீ-போல். 1371

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவம் உள்ள இரண்டு விற்பனையாளர் உடனே வேண்டும். நேரில் வரவும். தஞ்சை ஸ்ரோஸ், சின்னக்கடை, யாழ்ப்பாணம். 1374

# லேத் வேலையாள் தேவை

நீர் இறைக்கும் பம்புகள் கடைந்து மண்ணெண்ணெய்/ மின்சாரம் முதலியவற்றில் வேலை செய்யும் இயந்திரங்களுக்கு பூட்டுவதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. எதிர்பார்க்கும் ஊதியத்தைக் குறித்து எழுத்து மூலம் உடனே விண்ணப்பிக்கவும்.

484, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்

உடனடியாக அவசர வேலைகள் முடிப்பதற்கு
# ஆட்கள் தேவை
அனுபவமுள்ள வேக்ஸ் சொப் பி(F) ற்றர்,
வெல்டர், ரிங்கர்
WORKSHOP FITTER, WELDER & TINKER
போன்றோர்
உடனடியாகத் தேவை
பத்து நாட்கள் வரை மட்டும்வேலை செய்வதற்கு
தற்காலிகமாக ஆட்கள் தேவை
சம்பளம் நாளொன்றிற்கு 30/- இருந்து 60/- ரூபா வரை
அனுபவத்திற்கேற்றபடி வழங்கப்படும்.
உடன் நேரில் வரவும்.
சேவிகிளாஸ் & மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி; (1363)

**மணிவாக்கு**

கத்தியையெடுப்பவர்களெல்லாம் கத்திக்கத்தியாலேயே மடிந்து போவார்கள்.

— பைபிள்

# நமது நோக்கு

## உலகின் இன்றைய தேவை

எங்கள் நேற்றைய பத்திரிகையில் "உலகின் இன்றைய தேவை" என்ற தலைப்பில் பல பிரயோசனமான தகவல்கள் நிறைந்த கட்டுரை வாசகர்களின் கவனத்தை ஈர்த்திருக்கும்.

அபிவிருத்தியா ஆயுத உற்பத்தியா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருந்தது. விடை கோரிய வினா அல்ல அது.

முன்னேற்றம் அடைந்த நாடுகள் ஆயுத உற்பத்தியில் செலவிடும் பணம் வறிய நாடுகளின் பசி, பிணி அறியாமை போன்ற குறைகளை நீக்க உதவுமென்பதை புள்ளி விபரங்களுடன் கட்டுரை ஆசிரியர் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

ஒரு சிறந்த உதாரணம்; ஒரு நவீன ஜெட் யுத்த விமானத்தின் விலை 4000 (நாலாயிரம்) லட்சரூபாவாகும். இத்தொகை மருத்துவ வசதியின்மையால் படுமோசமாகப் பாதிப்படைந்திருக்கும் நாலாயிரம் கிராமங்களுக்கு வைத்திய வசதிகளை ஏற்படுத்த உதவும்.

வளர்முக நாடுகளுக்கு அவசியம் தேவைப்படும் அபிவிருத்திக்குதவக் கூடிய நிதியை வழங்காமல், வளர்ச்சி பெற்ற நாடுகள் ஆயுத உற்பத்தியில் அநியாயமாகச் செலவிடுகின்றனர். இந்த நீதிகெட்ட நிலைமை நாமும் பலமாகக் கண்டிக்கின்றோம்.

மெக்ஸிக்கோவில் கூடிய "கங்குன்" உச்சிமாநாடு நிதி உதவி பற்றிப் பரிமாறிய கருத்தின் மூலம் வேறுவகையில் அமைவதை நாம வாசகர்கள் முன்வைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நிதிஉதவி-குறைந்தவட்டியில் கடனுதவியோ அல்லது கொடையோ, இன்றைய நிலைமையில் வறிய நாடுகளின் வளர்ச்சிக்குத் தக்க வகையில் பயன்படாதென்பதே அங்கு பரிணமித்த முக்கிய கருத்து.

ஜனநாயகத்தின் வற்புறுத்திய கருத்து இதுவானாலும், இதற்கு ஆதாரமாக விளக்கம் கொடுத்த கலிபோர்ணியா பல்கலைக்கழக முன்னைநாள் பேராசிரியர் திரு. ஹார்டின் உதவிநாடும் வறிய நாடுகளைச் சிந்திக்கத் தூண்டியிருக்கிறார்.

நிதி உதவி என்பது அபினைப் போன்ற ஒருபோதை அதனைப் பழகிக் கொண்டால் கைவிடுவது கடினம் என்பது பேராசிரியரின் மணிவாக்காகக் காணப்படுகிறது.

வருடாவருடம், பல வருடங்களாக பலவித நிதி உதவிகளைப்பெற்ற வறிய நாடுகள் வறுமையில் அதிகரிப்பது கண்கூடு. தன்னையே தனக்குதவியென்ற நாட்டின் பிரச்சினைகளைச்சுய உதவியுடன் அணுகமுயன்றவர்களே முன்னேறியிருக்கின்றனர்.

ஆசியாவின் இருபெரும் நாடுகளை உதாரணமாக ஒப்பிட்ட பேராசிரியர் ஹார்டின், 1950ம் ஆண்டு தொடக்கம் இந்தியா பல நாடுகளிடம் பாரிய உதவி பெற்றிருக்கிறது; இன்றும் உதவியையே நாடி நிற்கிறது; 1957ம் ஆண்டுவரைச் சீனா ஒரே ஒரு நாடாகிய சோவியத் யூனியனிடம் உதவிபெற்ற சீனா, வேறெந்த நாட்டின் உதவி இன்றி இன்று என்ன நிலையில் இருக்கின்றது என்ற கேள்வியை எழுப்புகின்றார்.

இதற்கும் தக்க பதிலளித்து பேராசிரியரின் கூற்றைக் கேலிபண்ணும் திறமையுடையவர் இல்லாமலில்லை; ஆனால் அவருடைய கருத்து இலகுவில் ஆட்சேபிக்கக்கூடியதொன்றல்ல.

இன்று நாம்தேடும் உதவி எமது நாட்டின் பெருகிவரும் ஜனத்தொகையைக் கவனத்திற்கொள்ளாத திட்டத்தில் எழுந்த உதவி.

உலகில் 250 கோடிமக்கள் வறுமையால் வாடுகின்றனர்; வருடாவருடம் நான்கு கோடி இந்தப்பட்டாளத்தைச் சேர்ந்தவண்ணம் இருக்கின்றனர். இத்தொகை வறிய ஆசிய ஆபிரிக்க நாடுகளிலேயே பெரும்பான்மையாகக் காணப்படுகிறது.

இந்த மூலப்பிரச்சினைக்கு செல்வந்த நாடுகளின் பண உதவி பரிகாரமாகாதென்பதே பேராசிரியரின் பிடிவாதக் கொள்கையாகும். நாட்டின் நோய்க்கு நாடே மருந்து தயாரிக்கக் கடமைப்பட்டுள்ளது.

கொடையும் கடனும் இன்றைய நிலையில் ஒரு பொருளைக் குறிக்கும் இரு சொற்கள்.

வறுமை நாடுகள் பல, இயற்கை வளம், மூலப்பொருள் வளம் பொருந்திய நாடுகள். இவற்றை ஆட்சி செய்யும் அரசுகள் இந்த இயற்கைச் செல்வத்தைத் தக்கமுறையில் விருத்தி செய்து திரட்டி, ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மீளா வறுமையில் வாடுகின்றன.

சீனாவை ஒரு உதாரணமாகக் கொண்டபோதும், ஒவ்வொரு நாடும் தனது கலாச்சார இலட்சியங்களுக்கமைய அபிவிருத்தியில் ஈடுபடுவதற்கு முக்கியதேவை; பொதுமக்களின் கடின உழைப்பு; தொழில் நுட்ப உதவி நாட்டின் தேவைக்கேற்றது; ஜனத்தொகையை நாட்டின் செல்வத்துக்கு அமைந்த அளவில் கட்டுப்படுத்தும்திறமை முதன்மையானது.

ஒருதலைப்பட்ட கருத்துப் போல இது தோன்றினாலும் சுயமுயற்சி வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யக்கூடிய பொருளல்லவென்பதை நாம் உணர்வது மிக மிக அவசியம்.

## யாழ். மாவட்ட பாவனையாளர் சங்க சமாஜம் 18-ம் திகதி அங்குரார்ப்பணம்

(சுண்டிக்குளி)

யாழ் மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்களின் பிரிவின் பிரதேச பாவனையாளர் சங்கங்களை அங்கத்தவமாகக் கொண்ட யாழ். மாவட்ட பாவனையாளர் சங்கசமா

(6-ம் பக்கம் பார்க்க)

# பாடசாலை அமைப்புமுறை

(மானிப்பாய், சுதுமலை சிதம்பர வித்தியாசாலை ஸ்தாபகர் நினைவு தினம் - பரிசளிப்பு விழாவில் யாழ் பல்கலைக்கழக கல்வித் துறைத் தலைவர் திரு. பா. சந்திரசேகரம் ஆற்றிய உரையின் சுருக்கம் இது.)

ஒரு நாட்டின் குழந்தைகள், பிள்ளைகள், மாணவர்கள், மக்கள் அந்நாட்டின் மாபெரும் சொத்து! நாட்டின் வரப்பிரசாதம். அவர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக்கி உகந்த நன்முறை வாழ்க்கைப் பாதையில் இட்டுச் செல்வது கல்வியின் முக்கிய நோக்கமாகும் பணியாகும்.

உலகின் அறிவியல் சார் தாக்கத்துக்கும் நாட்டின் முழுமை பொருந்திய வளர்ச்சிக்கும் ஏற்றவாறு கல்வித்தத்துவம் உருவாக்கப்படுதல் வேண்டும் என்று கூறும் இவ் அறிக்கையில் நூல் சார் கல்வியுடன் தொழில் நுணுக்க அடிப்படையினான கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. நவீன பொருளாதார அமைப்பையேற்படுத்துதல் தொழில் வாய்ப்பைப் பெறக் கூடிய கல்வி முறையை உருவாக்குதல் தொழில் நுட்ப, தொழில் வாரியான விவசாயம் போன்ற துறைகளுக்கு விசேட பயிற்சி அளித்தல் ஆகியன இக்கல்விப் புனருத்தாரணத்தின் பொது நோக்கமாகும்.

விசேடமாக இலங்கை ஒரு வளர்முக நாடு எனும் தோரணையில் இந்த இலட்சியத்தை மனமார வரவேற்க வேண்டும்.

இப்பாடப் புலன்கள் மூலம் தொழில் உலகிற்கு மாணவர்கள் அறிமுகம் செய்யப்படுவார்கள், அதன் மூலம் தொழிலின் மகத்துவம் உணரப்படும். வீட்டுவேலை சம்பந்தப்பட்ட பயிற்சி மனப்பாங்கு உருவாக்கப்படும். தொழில் கற்பதற்கு முன்னர் உள்ளம் தொழில் இயல் மனப்பாங்கினை அடையும். சில தொழில் துறைகளுக்கு தகுதிகளுக்கு ஏற்ற தேர்ச்சியால் மாணாக்கர் கைவினைத்திறன் பெறுவார். அறிவியல், தொழில் நுட்பம் சார்ந்த மரவேலை. உலோக வேலை, பயிர்ப்பண்பு, மனையியல் ஆகிய பாடப்புலன்கள் கற்பிக்கப்படும். தொழில் நுணுக்கப் பாடங்கள் பொதுக் கல்வியின் ஒரு பாகமாகக் கருதப்படும்.

எனினும் தொழிற்சந்தையில் பொதுவாக எதிர்பார்க்கப்படும் பொதுத்தேர்ச்சித் திறன்கள், நாட்டங்கள், தகவுகள், ஆள்சார் பண்புகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் அதே வேளையில் தொழில் உலகின் பால் மாணாக்கரின் நாட்டத்தை மையப்படுத்தவேண்டுமென்றும் கொள்ளப்படுகின்றது.

இங்கு குறிக்கப்பட்ட பாடப் புலன்கள் மூலம் கருத்துக்கல்வியும், செயற்திறனும் இணைக்கப்படும் உள உடல் ஒருங்கிணைப்பு இதன் மூலம் வளர்க்கப்படும்.

**பா. சந்திரசேகரம்**

இப்பாடப் புலன்களின் அடிப்படைத்தத்துவம், காந்தியடிகள் தந்த கல்விநெறி அமெரிக்கக்கல்விநெறியாளர் ஜோன் டியூஇ அளித்த கல்வித்தத்துவம் தொழில்முன் நிலைப்பாட நெறி ஆகியவற்றில் எழுந்தன என்று கொள்வது பொருத்தமாகும்.

அடுத்ததாக பள்ளிக்கூடக் கொத்தணிகள் அல்லது கூட்டுப் பள்ளிக்கூடங்கள் அல்லது முழுப்பள்ளிக்கூடங்கள் அல்லது பள்ளிக்கூடத் தொகுதி எனும் பெயர்களால் அழைக்கப்படும் பள்ளிக்கூட அமைப்புமுறையை யிட்டுச் சிந்திப்பது முக்கியமாகின்றது.

இக்குழுப்பள்ளிக் கூடங்கள் பொதுவாக வரையறுக்கப்பட்ட ஒருபுவியியல் புலத்திலே உள்ளபள்ளிக்கூடங்கள் ஒரு தொகுதியாக உருவம்பெறும்.

நமது நாட்டிலுள்ள 9.500 பள்ளிக் கூடங்களும், 1000 குழுக்களாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் ஏறக்குறைய 10 பள்ளிக்கூடங்கள். 3,000 தொடக்கம் 5,000 மாணவர்களைக்கொண்டு இயங்கும். இவற்றினுள் முதல் நிலை, இடைநிலை, கல்லூரித்தரத்திலான பள்ளிக்கூடங்கள் இடம் பெறும். இப்பள்ளிக் கூடங்களுள் நடுநாயகமாக 'மூலாதாரப்பள்ளிக்கூடங்கள்' இடம் பெறும் இப்பள்ளிக்கூட அதிபர் இப்பள்ளிக்கூடங்களுள் முதன்மைபெற்று விளங்குவார்.

இம்முறை உருவாக்கத்துக்கு அரசு தரும் நியாயங்கள் ஒரு பிரதேசத்தின் மூலவளங்களை ஒன்று சேர்த்து பயன்படுத்துதல், கல்விவசதிகளைச் செவ்வனே பங்கீடு செய்தல், நிர்வாகத்தினை ஒருமுகப்படுத்தல் ஆகியனவாம். இந்த அமைப்புமுறை நமது நாட்டுக்குப் பொருத்தமானதா என ஆராய்வது முக்கியமாகும்.

(நாளை முடியும்)

## "மாணவசமுதாயத்திற்கு வெள்ளை அறிக்கை ஒளிஊட்டும்"

(யாழ்ப்பாணம்)

"வெள்ளை அறிக்கை சகல இன, மத, மொழி மக்களுக்கும் சம கல்வியை அளிப்பதோடு இதுவரை காலமும் கல்வித்துறையில் இருந்து வந்த குறைபாடுகளை ஒழித்து மாணவ சமுதாயத்தில் ஒளி பிறக்க வழிசெய்துள்ளது"

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் தலைமை வகித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. மு. திருநீலகண்டசிவம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் இப்பகுதிப் பிள்ளைகளுக்கு உயர்தர பூரணத்துவமான தன்னிறைவு பெற்ற ஒரு மத்திய கல்லூரியாக இப்பாடசாலையை மிளிரச் செய்ய வேண்டும் என்றும் துரிதமாக வளர்ந்து வரும் எமது பாடசாலையில் ஒரு தகுதி வாய்ந்த நூல் நிலையம் இல்லாமை எமது மாணவர்களின் அறிவு வளத்தைப்பெரிதும்பாதிப்பதாகவும் பாடசாலைக்குச் சொந்தமான விளையாட்டு நிலம் இதுவரை பெற்றுக்கொள்ள முடியாமற் போனமை இப்பாடசாலைப் பிள்ளைகளுக்கு பெரும் துரதிர்ஷ்டமென்றும் கூறினார்.

யாழ் அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. ச. பூபாலசிங்கம், வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா மற்றும் பலரும் உரையாற்றினர்கள். (கு)

## அதிபர் பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சை

1977ம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின்படி 4ம், 5ம்தர அதிபர்களுக்கான பரீட்சை நடந்து அப்பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான நேர்முகப் பரீட்சையும் கொழும்பில் நடைபெற்றது. இந் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய எவருக்கும் இதுவரை அதிபர்பதவி நியமனம் வழங்கப்படவில்லை. அதன் பின்னர் அண்மையில் மீண்டும் ஒரு பரீட்சை நடைபெற்றது. 1978ல் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றவேண்டியதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### மக்கள் கருத்து

1978ம் ஆண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட கண்டி மாவட்ட ஆசிரியர் ஒருவருக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு கல்விச் சேவை ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதே நேரத்தில் வடமாகாணத்திலிருந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய ஆசிரியர் பலருக்கு இதுவரை மீண்டுமொரு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைப்புக் கிடைக்கவில்லை.

முன்னர் நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு அழைக்கப்பட்டோர். மீண்டும் ஒரு நேர்முகப்பரீட்சைக்காகக் கொழும்புக்கு அழைக்கப்படுவது இன்று நாட்டு நிலைமைக்கு ஏற்றதாக இருக்கவில்லை

நாடெங்கும் பதட்டநிலை-போக்குவரத்துக் கஷ்டங்கள் இருக்கும்போது முன்னர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரை மீண்டும் கொழும்புக்கு அழைக்காது பிரதேசக் கல்வி அலுவலகங்களிலேயே நேர்முகப்பரீட்சையை நடாத்த ஆவன செய்யுமாறும், 1978ல் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட அனைவரும் மீண்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துமாறும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும், ஆசிரிய சங்கங்களையும் மிக வினயமாக வேண்டிக் கொள்கின்றேன்

ந. சிவபாதம்
ஆனைக்கோட்டை

## காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் தீர்மானம்

(காரைநகர்)

காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் கல்விச் சேவைப் பகுதியினரின் விசேஷ பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கழகம் இயற்றிவரும் கல்விச் சேவை தொடர்பாக நாட்டின் பலபாகங்களிலிருந்தும் இருந்து ஆசிரியர்கள் அனுப்பி வைத்திருந்த பாராட்டுக் கடிதங்கள் நிர்வாகியால் சமர்ப்பிக்கப்பட்டன

ஆசிரியர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்கி எதிர் வரும் டிசெம்பர் மாதம் நடைபெற இருக்கும் க. பொ. த. சாதாரணதர வகுப்புப் பரீட்சைக்கு முன்னோடியாகத் தமிழ்மொழி 1-ம், 2-ம் வினாத்தாள்களை இம்மாதம் 12-ம் திகதிக்குப் பிந்தாமல் வெளியிட்டு விநியோகிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

# அமெரிக்க விமானங்கள் நடுவானில் மோதின

## ஒன்று கடலுக்குள் மூழ்கியது

வாஷிங்டன், நவ. 4

அமெரிக்க எப் - 15 ரக போர் விமானம் நடுவானில் மற்றுமொரு அதே ரக விமானத்துடன் மோதிக்கொண்டதை அடுத்து சாதாரண விமானம் சுக்குநூறாகி கடலில் வீழ்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோ வளைகுடாவுக்குமேல் மோதிக் கடலில் வீழ்ந்த விமானத்தின் பைலட் காணாமற்போய்விட்டார் என்றும் கடந்த ஐந்து தினங்களில் விபத்துக்குள்ளான ஐந்தாவது அமெரிக்கப் போர் விமானம் இது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## மன்னர் ஹுசெய்ன் - றீகன் சந்திப்பு

வாஷிங்டன் நவ 4

ஜோர்டான் மன்னர் ஹுசெய்ன் நேற்று அமெரிக்க அதிபர் திரு. றொனால்ட் றீகனுடன் வாஷிங்டனில் மத்திய கிழக்கு விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். [இ]

மானிப்பாய் தொகுதியில்

# சுயஉதவி வீடுகள் திட்டம் ஸ்தம்பிதம்?

(பண்டத்தரிப்பு)

சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மானிப்பாய் தேர்தல் தொகுதியில் இவ்வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட 30 வீடுகள் நிருமாண வேலைகள் அத்திவாரக் கட்டுடன் விதம் பிதமடைந்து விட்டதாகவும் தொடர்ந்து கட்டிட வேலைகளை தொடர்ந்து செய்வதற்கு வீடமைப்புத் திணைக்களத்தினர் கட்டிடப் பொருட்களை வழங்கவில்லை என்றும் பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இவ்வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைப் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் மத்தியில் பெரும் கவலையும், அதிருப்தியும் ஏற்பட்டுள்ளது.

தேர்தல்தொகுதிவாரியாக சுய உதவித்திட்டத்தின் கீழ் 30 வீடுகளைக்கட்டும் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்த வீடமைப்புத் திட்டத்தின் கட்டிட வேலைகள்யாவும் அமைச்சின் திட்டப்பிரகாரம் கடந்த ஜூலை மாதத்திற்கிடையில் கட்டிமுடிக்கப்படவேண்டும். ஆனால் கட்டிடவேலைகளுக்குத் தேவையான கொங்கிறீற்றுக்கல், மரத்தளபாடங்கள், சீமெந்து கல்லு, மணல் ஆகிய பொருட்களை உரிய காலத்தில் இவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தமக்கு விரைவில் வீடுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தமது சொந்தப் பணத்தையும் அத்திவாரக்கட்டுவேலைகளுக்கு செலவிட்டவர்கள் தற்போது மிகவும் மனமுடைந்துள்ளனர். சுட்டுமட கிராம அபிவிருத்திச்சங்கம் இதுபற்றி உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும் பிரதம மந்திரியுமான திரு. ஆர். பிரேமதாசாவின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளது.

## பொறுப்பதிகாரி

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் நிர்வாக பொறுப்பதிகாரியாக திரு. எம் மயில்வாகனம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்பு பண்டத்தரிப்பு பட்டின சபை விசேட ஆணையாளராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சுழிபுரத்தில்**

[சுழிபுரம்]

யாழ். மாவட்டசபை சுழிபுரம் உப அலுவலக மேற்பார்வை உத்தியோகஸ்தராக யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகசுந்தரம் பொறுப்பேற்றுள்ளார். நேற்று சுழிபுரம் உப அலுவலகத்திற்கு வருகைதந்த ஊழியர்களுடன் கலந்தாலோசனை நடத்தி சில பணிப்புரைகளை ஊழியர்களுக்கு வழங்கிச் சென்றுள்ளார்.

## 140 கி. மீட்டர் வேகத்தில் புயல்

புதுடில்லி. நவ.4

வடக்கு திசையில் நகர்ந்து கொண்டிருக்கும் புயல்காற்று குஜராத்தின் கரையோரம் தரை முகத்தை தாக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அரபுக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற குஜராத், மகாராஷ்டிர மாநிலங்களில் மீனவர்களின் காணாமல்போன 53 மீன்பிடிப் படகுகள் ஜாகுவா துறைமுகத்தை சென்றடைந்ததாகக் கூறப்பட்டது. இப்புயல் காற்றின் வேகம் மணியொன்றிற்கு 120 முதல் 140 கிலோ மீட்டர் என்று அறிவிக்கப்பட்டது.

தற்போது இப்புயல்காற்று ஜூனகாடுவை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ

## இஸ்லாமிய புத்தாண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பொம்மைவெளி புதிய சோனகத்தெரு "அல்மதரஸத்துஸலாமியா"வில் கடந்த சனிக்கிழமை இஸ்லாமிய புத்தாண்டுவிழா கொண்டாடப்பட்டது.

செயலாளர் ஜனாப் எம்.இ.றாஸாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியின்போது இளைப்பாறிய அதிபர் அல்ஹாஜ் ஜனாப் எம். யூ. எம். அப்துல்ரஸ்ஸாக் (முஹியத்தீன் பள்ளிவாசல் பேஷ் இமாம்) தலைமை வகித்தார். ஈற்றில் மாணவ மாணவிகளின் ஸலவாத்துடன் விழா முடிவுற்றது. [இ]

## தேவஸ்தான குருவுக்கு கௌரவம்

(சுழிபுரம்)

வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவான ஸ்ரீ ஸ்ரீ சோ. தண்டபாணிக்குருக்களுக்கு "சிவாகமசித்தாந்த ஞான தேசிக பானு" எனும் கௌரவ விருதுப் பட்டத்தை வல்வெட்டி சைவ அன்பர்கள் வழங்கி கௌரவித்துள்ளனர். அன்னவர்கள் சார்பாக இப்பட்டத்தை பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திரு கே. எஸ். மகேசன் வழங்கினார்.

சூறாவளியினால்

# அரபுக்கடலில் மறைந்த 175 படகுகள் நாடு திரும்பவில்லை

புதுடில்லி, நவ. 4

அரபுக் கடலில் இரண்டு தினங்களுக்கு முன் சூறாவளியினால் அடித்துச் செல்லப்பட்டவற்றில் 175 படகுகள் இன்னமும் கரை ஒதுங்கவில்லை என்றும், 175 படகுகள் மட்டுமே கரைக்குத் திரும்பின என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் அரபுக் கடலில் காணாமற்போன படகுகளைத் தேடும் பணியில் கடற்படைக் கப்பல்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றன.

சூறாவளியினால் போர்பந்தரில் மட்டும் 5 கோடி ரூபா பெறுமதியான பயிர்கள் சேதமடைந்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஐ. நா. செயலாளர் தெரிவு

# பாதுகாப்புச்சபை இரகசிய கூட்டம்

நியூயோர்க், நவ. 4

பெரும் சர்ச்சைக்குரிய ஐக்கிய நாடுகள்சபையின் பொதுச் செயலாளரைத் தெரிவு செய்வது குறித்து பாதுகாப்புச் சபை நேற்று இரகசியமாகக் கூடி ஆராய்ந்தது.

பொதுச்செயலாளர்தெரிவுக்காக நடந்த வாரம் இடம்பெற்ற வாக்கெடுப்பில் இப்பதவிக்காகப் போட்டியிட்ட இருவருக்குமே போதிய வாக்குகள் கிடைக்கவில்லை என்பது தெரிந்ததே.

இன்று மீண்டும் வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுச் செயலாளர் பதவிக்கு முன்னாள் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் தன்ஸானிய வெளியுறவு அமைச்சர் ஜனாப் சலீம் ஆகிய இருவரும் போட்டியிடுகின்றனர். (இ)

# பிரேமனைக் கொல்கிறோம் பார் என்று கூறியவர்கள் அவரைத் தாக்கினர்

## கே. கே. எஸ். வீதி மரணம் கொலை எனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

"பிரேமனைக் கொல்லுகின்றோம் பார் என்று கூறிய விஜயனும், வெள்ளையனும் சோடாப் போத்தலால் பிரேமனைத் தாக்கினார்கள். நான் பயத்தினால் ஆரியகுளம் சந்திக்குச் சென்றுவிட்டேன்.

இவ்வாறு யாழ். கே. கே. எஸ். வீதி கிளாக்டவரில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நடேசு பிரேமன் என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த திரவியம் இராசேந்திரம் கூறினார்.

யாழ். ஆஸ்பத்திரியில் மரண நீதவான் திரு. எம். அமிர்தலிங்கம் மரண விசாரணை நடத்தினார்.

சம்பவத்தில் காயமடைந்தவரான திரவியம் இராசேந்திரம் மேலும் கூறியதாவது:-

சம்பவதினம் 12 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு சலஞ்சென்றவனுடன் நான் வந்த போது அங்கு போவா, விஜயன் ஆகியோர் டாக்ஸியில் வந்தனர். பின்பு சலஞ்சென்றவனுக்கும் தங்களுக்குமிடையில் சண்டை பற்றி கதைத்தனர். கதை நடந்தவை நடந்து முடிந்துவிட்டன. எல்லாவற்றையும் மறந்து ஒற்றுமையாக போவோம் என்றார்கள். பின்பு போவா என்பவர் காரில் ஏறும்படி பிரேமனை அழைத்தார். அதற்கு சேட் இல்லை என்று அவர் சொல்ல போவா தான் அணிந்திருந்த நீலநிற சேட்டைக் கழற்றி "நாங்கள் இருவரும் சிநேகிதர்கள் எனக்கூறி அந்தச்சேட்டை அணிந்துகொண்டு வரும்படி சொன்னார்.

நானும் பிரேமனும் அந்த டாக்ஸியில் ஏறினோம்.

"டாக்ஸி ஓட்டியின் சாரதி பெயர் தெரியாது. அவரைக் கண்டால் அடையாளம் காட்டமுடியும். பின்பு எல்லோருமாக காங்கேசன்துறை ரோட்டிலிருக்கும் கிளப்புக்கு ஒழுங்கை வழியாகச் சென்றோம். அப்பொழுது நேரம் பகல் 12-45 அல்லது ஒரு மணியிருக்கும்.

### வாளுடன் வந்தார்

'வெள்ளையன் என்பவர் எங்கள் முன்சென்றுபின் திரும்பி ஒரு வாளுடன் வந்தார் நான் வெள்ளையனைப் பின் சென்றேன். என்னைத் தொடர்ந்து பிரேமனும் மற்றவர்களும் வந்தார்கள்.

பின்பு கிளப்புக்குள் வைத்து வெள்ளையன் வாளால் என்னை வெட்டினார். ஆனால் அவ்வெட்டு தடைப்பட்டு தலையில் பட்டு சிறுகாயம் ஏற்பட்டது. இதே நேரம் விஜயன் [illegible] எனது முதுகிலும் நெஞ்சிலும் தாக்கினார்.

"வெள்ளையன் விஜயனைப் பார்த்து "அதோ பிரேமன் ஓடப்போகிறான். அவனைப்பிடி' என்றார். அதே நேரம் வெள்ளையன் 'உன்னைக் கொல்ல மாட்டோம்; பிரேமனைக் கொல்லுகின்றோம் பார்' என்று சொல்லிவிட்டு இருவரும் பிரேமனைப் பிடித்தார்கள். அப்பொழுது சோடாப்போத்தலால் பிரேமனைத் தாக்கினார்கள்:

"நான் பயத்தினால் ஆரியகுளம் சந்திக்குச் சென்று சொந்தக்காரரான கெஸ்காவுக்கு நடந்தவற்றைச் சொன்னேன். சிறிது நேரத்தில் அவர்கள் அங்கு சென்று இறந்தவரை யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தார்கள். அவர் இறந்துவிட்டார். இறந்தவருக்கும் போவா, விஜயன், வெள்ளையன் ஆகியோருக்குமிடையில் தகராறு இருந்ததென்று எனக்குத் தெரியாது. ஆனால் இவர்கள் எல்லோரும் நண்பர்களாக இருந்தார்கள்."

மற்றும் மாணிக்கம் செல்வராசாவும், இறந்தவரின் தந்தை நடேசனும் சாட்சியமளித்தார்கள்.

மரண நீதவான் கொலையெனத் தீர்ப்பளித்தார்.

யாழ் சட்ட வைத்திய] அதிகாரி திரு எஸ். சரவணபவானந்தன், பிரேத பரிசோதனை செய்து வெட்டுக்காயங்களால் இரத்தப் பெருக்கு ஏற்பட்டதால் மரணம் சம்பவித்தது என்று சொன்னார்.

[மா-இ]

## நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக நிர்வாக மேற்பார்வையாளராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலக நிர்வாக மேற்பார்வையாளராக யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

"சூழலும் பாதுகாப்பும்" என்ற கருத்தரங்கு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு யாழ். மாவட்ட இளைஞர்சேவை அதிகாரி திரு. க. சிவானந்தமூர்த்தி தலைமை தாங்கினார். தேசிய இளைஞர் சேவைமன்ற வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் திரு. அ. நாகேந்திரன் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார். [இ

வடக்கு, வடமத்திய பகுதிகளில்

# குழாய்க் கிணறுகள்

(கொழும்பு)

ஜப்பான்-இலங்கை உதவித் திட்டத்தின் கீழ், ஜப்பானிலிருந்து பெறப்படவிருக்கும் குழாய்க்கிணறு தோண்டும் கருவிகளை வடக்கு, வடமத்திய மாகாணங்களில் நிறுவுவதென விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இக்கருவிகள் அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் நிறுவப்படவிருக்கின்றன. இவற்றின் பெறுமதி 50 கோடி ரூபாவாகும்.

விவசாய அமைச்சர் திரு. ஈ. எம். சேனநாயக்கா இது பற்றித் தெரிவிக்கையில்; கிடைக்கவிருக்கும் ஐந்து கருவிகள் ஒவ்வொன்றும் தலா நூறு குழாய்க்கிணறுகளைத் தோண்டக் கூடியவை என்று விளக்கினார்.

இவற்றின் உதவியுடன் குழாய்க் கிணறுகள் தோண்டும் பட்சத்தில் மிளகாய், தானிய வகைகள் போன்ற உப உணவுப் பயிர்வகைகளைச் செய்கை பண்ணுவோர் பருவகாலமற்ற போதிலும்நீர்க் கஷ்டமின்றி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படலாமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். [இ]

## யாழ். பஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

கந்தையா தனபாலசிங்கம், இன்னத்தம்பி விஜயகுமார், நடேஸ்வரன் விமலேந்திரன், பொன்னையா தருமலிங்கம், இராசையா சுபாஸ், சரவணை இளங்கோவன், சிறீதரன் சசிதரன், நாகராசா வரதாஸ், தம்பி இராஜசயா, ஹெட்டியாராச்சிகே அன்ரனி ஆகிய பத்துப்பேருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

யாழ் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் சிவசம்பு தவலிங்கத்தின் பணிப்பின்பேரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

(மா-அ)

## இளங்கலைஞர் மன்றத்தின் இசைவிழா மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது

இலங்கை இளங்கலைஞர் மன்றம் 6-11-81 முதல் 16-11-81வரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தவிருந்த 10-வது ஆண்டு இசைவிழா பிற்போடப்பட்டுள்ளது. ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். அனுமதிச்சீட்டுப் பெற்றவர்களின் ரிக்கற்றுகள் பின்னர் செல்லுபடியாகும்.

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.


(1369)

## 1-வது ஆண்டு நினைவாஞ்சலி

### அமரர் திரு. நாகலிங்கம் பத்மநாதன்

சரவணை மேற்கு

தோற்றம்: 15-6-1946 மறைவு: 5-11-1980



அன்பின் திருஉருவாய்
அறிவின் பிறப்பிடமாய்
பண்பின் ஒளிச்சுடராய்
எம்மாருக்கும் இன்முகம்
காட்டி எமைக்காத்த
தெய்வமே!
உன்முகம் காணாது
ஓராண்டுசென்றதையா-
மறக்காத நினைவுகளால்
மனதில் குடிகொண்டு
நீங்காமல் நின்று நிதமும்
துணைபுரிய என்றும்
உனைப் பணிந்தோம்
எங்கள் ஐயா உமது
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்.

அன்பு தாயார், உடன்பிறந்தார், சுற்றத்தார்
சரவணை மேற்கு, வேலணை.
அன்பு மனைவி, மக்கள், சுற்றத்தார்
சரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை. (1324)

## யாழ். மாவட்ட,..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஜம் இம்மாதம் 18ம் திகதி யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ள பிரதேச பாலனையாளர் சபைப் பிரதிநிதிகளும், கள்ளு? ஆட்சி மன்ற உறுப்பினர்களும், யாழ் மாநகரசபை முதல்வர் திரு இராசா விசுவநாதன், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா ஆகியோரும் நகரசபை முதல்வர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். இம் மகாநாட்டுக்கான சகல நடவடிக்கைகளையும் யாழ் உள்நாட்டு வியாபார ஆணையாளர் திரு. ரி. மார்க்கண்டு ஒழுங்கு செய்துள்ளார்.

## வரியிறுப்பாளர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளது.

வெவ்வேறு அலுவலகங்களில் வெவ்வேறு பதவிகளை வகிக்கும் நிர்வாக மேற்பார்வையாளர்கள் உப அலுவலகத்துக்கு மட்டுப்படுத்தியமனம் பெறும்போது அவர் இரண்டு முழு நாளும், ஒன்றுக்கு மேற்பட்ட அலுவலகங்களுக்குமே நியமனம் பெறுபவர் ஒரு நாளும் உப அலுவலகங்களில் கடமையாற்ற வேண்டுமென்றும் தலைவர் பணித்துள்ளார். (மா

## திருப்பத்தூர் உப தேர்தல்

சென்னை நவ. 4

திருப்பத்தூர் உப தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளராக திரு. ஆர் என். அருணகிரியை நிறுத்தியுள்ளதாக, கட்சிப் பொதுச் செயலாளர் நேற்று அறிவித்தார்.

இதேசமயம் திராவிட முன்னேற்றக் கழகம் இத்தேர்தலில் போட்டியிடுவதில்லையென்றும், இந்திரா காங்கிரசை ஆதரிப்பதில் மாறுதல் எதுவுமில்லையென்றும், நேற்று கூடிய தி. மு. க. செயற்குழு தீர்மானித்துள்ளது. உப தேர்தலில் இதுவரை 10மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மனுக்கள் தாக்கல் செய்யும் கடைசி தினம் நாளையாகும். (க)

## சமயதீட்சை

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் கோயிற்பற்று இந்து சமய விருத்திச்சங்கத்தின் ஆதரவில் சைவ சமய தீட்சை ஐப்பசி மாதம் வெள்ளிக்கிழமைகள் தோறும் நடைபெற்றுவருகின்றது.

முதல் வெள்ளி நவாலியிலும் இரண்டாம் வெள்ளி ஆனைக்கோட்டையிலும் பின்னர் சுதுமலையிலும் சண்டிலிப்பாயிலும் சமயதீட்சை நடைபெறும்.

## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

டிராக்டர் - சயிக்கிள் விபத்தில் இருவர் படுகாயமுற்று யாழ்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சித்தன்கேணியில் இவ்விபத்து நடைபெற்றுள்ளது.

சயிக்கிளில் சென்ற ஏ துரைரத்தினம், எஸ். யோகரத்தினம் ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

(மா)


## ஹோம்பினன்ஸ்லிமிட்டெட்

82, கன்னதிட்டி றேட்,
யாழ்ப்பாணம்.
போன்; 8310

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

### உல்லாச பஸ் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
3-11-81ம்திகதிசெவ்வாய்க்கிழமைதொடக்கம்

டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்
82, கன்னதிட்டிறேட், யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 8310)

(2) யாழ்.மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7596

புறப்படும் நேரம் மாலை 6-00 மணி

செல்லும் தினங்கள்
செவ்வாய், வியாழன், ஞாயிறு

கொழும்பிலிருந்து திரும்பும் தினங்கள்
திங்கள், புதன், வெள்ளி

### ஹோம் பினன்ஸ்

லிமிட்டெட்
463, காலி றேட், கொழும்பு.
போன்: 89190



சுப்பர் லைட்னிங் எக்ஸ்பிரஸ் கொம்பனி லிமிட்டெட்

## ஸ்தாபனத்தாரின் மகிழ்வான செய்தி

உங்கள் பயணம் சொகுசானதாக அமைய
ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பயணச் சேவை
6-11-81 வெள்ளி முதல் மங்களகரமானதாக
ஆரம்பமாகின்றது.

கொழும்பு - யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை
காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் - கொழும்பு

நீண்டகாலமாக யாழ்ப்பாண மக்கள் அனுபவித்து வந்த கஷ்டத்தை நீக்கும்பொருட்டு பல லட்ச ரூபா செலவில் சிங்கப்பூரிலிருந்து வருவிக்கப்பட்ட பொறியியலாளர்களின் மூளைவளங்களை பயன்படுத்தி அவர்களது நேரடி கண்காணிப்பில் உள்ளூரில் நிர்மாணிக்கப்பட்ட உறங்கல் இருக்கை வசதி கொண்ட

### 'லக்ஸறி ருறிஸ்ட் பஸ்கள்''

சேவைக்கு விடப்படுகின்றன.

நீண்டதூர பயணத்தை மகிழ்வுடனும் லாபத்துடனும் கடக்கலாம்.

கட்டணம்:
ரூபா 65-00 (ஒரு வழிப்பயணத்திற்கு மட்டும்)

புறப்படும் நேரங்கள்

★ தினசரி பிற்பகல் 6-30 மணிக்கு காங்கேசன் ரவல்ஸ் ஸ்தாபனத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்தடைந்து, இரவு 8-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு அதிகாலை 5-30 மணிக்கு கொழும்பு சென்றடைந்து தெகிவளை சந்தி வரை சேவையாற்றும்.

★ இரவு 8-30 மணிக்கு கொழும்பு ஒல்கொட் மாவத்தையில் இருந்து (கோட்டை புகையிரத நிலையம் முன்பாகவிருந்து) புறப்பட்டு அதிகாலை 5 30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்து காங்கேசன்துறை வீதி வழியாக காலை 6-15 மணிக்கு காங்கேசன்துறை சென்றடையும்.

ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

கொழும்பு

ஜே. எம். எஸ். மிரண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 11.
போன: 27031

லெக்ஷ்மி பவான்
(பிராமணாள் ஹோட்டல்)
97, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 11. போன்: 24821, 28244

யாழ்ப்பாணம்

ஸ்ரீ இராமகிருஷ்ணா,
இல. 9, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7497, 7065

காங்கேசன் ரவல்ஸ்,
பிரதான வீதி,
காங்கேசன்துறை.
போன்: 34

தலைமையகம்

### சுப்பர் லைட்னிங் எக்ஸ்பிரஸ் கொம்பனி லிமிட்டெட்

97, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11.
போன்: 24821, 28244


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சின்னக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ம் ஆண்டு நவம்பர் 5-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna, தொலைபேசி 7707, 889, 8186.